பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 13 சனிக்கிழமை 29.11.2025 கதிர் 021

## இனி இது ரகசியம் அல்ல!

இலங்கைமுழுவதும்பேரிடருக்குள் சிக்கிக் கொண்டுள்ளது. இடர் முகாமைத்துவ நிலையத்தின் இன்று காலைஅறிக்கையின்படிஒட்டுமொத்த 25 மாவட்டங்களுமே ☞ 2

# இந்தியப் போர்க் கப்பல்களிலிருந்து உடனடியாக அவசியமான உதவிகள்

இந்திய அரசின் அறிவுறுத்தலின்கீழ் இலங்கைக் கடற்பரப்பில் தரித்து நிற்கும் ஐ.என்.எஸ்.விக்ராந்த் மற்றும் ஐ.என்.எஸ்.உதயகிரி ஆகிய கப்பல்கள் ஊடாக சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அவசியமான உடனடி நிவாரண மற்றும் மனிதாபிமான உதவிப்பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இந்த உடனடி உதவி வழங்கல் குறித்து இலங்கையிலுள்ள இந்திய உயராணையரகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வங்காளவிரிகுடாவில்இலங்கைகடற்கரைக்குஅருகில் ஏற்பட்ட காற்றமுத்தத் தாழ்வு மையம் வியாழக்கிழமை 'தித்வா' சூறாவளியாக வலுப்பெற்றமை மற்றும் மண்சரிவு ஏற்பட்டமை ஆகியவற்றுடன் இலங்கை தொடர்ச்சியாக வெள்ளம் மற்றும் மண்சரிவுக்கு முகங்கொடுத்திருப்பதாகவும், பல மாவட்டங்களில் அத்தியாவசிய சேவைகள் தடைப்பட்டிருப்பதாகவும் அறியமுடிகின்றது. 'தித்வா' சூறாவளி காரணமாக பதிவாகிவரும் கடும் மழைவீழ்ச்சி மற்றும் கிழக்கு, மத்திய மாகாணங்கள் உள்ளடங்கலாக நாட்டின் பல்வேறு பாகங்களில் வீசும் வலுவான காற்றின் காரணமாக வீடுகள், கடைகள் மற்றும் முக்கிய உட்கட்டமைப்பு நிர்மாணங்கள் என்பன பெருமளவுக்கு சேதமடைந்துள்ளன.

எனவேஇந்நெருக்கடியினால்தோற்றுவிக்கப்பட்டுள்ள உடனடி மனிதாபிமானத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும்நோக்கில்,பாதிக்கப்பட்டகுடும்பங்களுக்கான உடனடி மனிதாபிமான மற்றும் இடர் நிவாரண ☞ 2

# இடர் முகாமைத்துவ நிதியைப் பெற குறைநிரப்பு பிரேரணைக்கு ஆதரவு

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் அறிவிப்பு

மழையுடனான காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவியளிப்பதற்கும், இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கும் மேலதிகமாக நிதி ஒதுக்க ஆளும்தரப்பு குறைநிரப்பு பிரேரணையைக் கொண்டு வந்தால் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். இடர் குறித்து விடுக்கப்படும் அறிவுறுத்தல்கள் தொடர்பில் பொதுமக்கள் கவனம் செலுத்தவேண்டும், அலட்சியமாகச் செயற்பட கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாட்டு மக்களிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை தொடர்பில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையில் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். உயிரிழப்புகள் மற்றும் ☞ 6

# வெள்ளம், மண்சரிவில் சிக்கி இதுவரையில் 69 பேர் இறப்பு

## மேலும் 34 பேரைக் காணாவில்லை மீட்புப் பணிகள் முழு வேகத்தில்





இலங்கையை தற்போது வாட்டி வதைத்துவரும்கடும்மழை,வெள்ளம், புயல், மண்சரிவு போன்ற இயற்கைப் பேரிடர்களால் இதுவரையில் 69 பேர் உயிரிழந்துள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. மேலும் 34 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நூறைத்தாண்டும்என்று எதிர்வுகூறப் படுகின்றது. காணாமல்போனவர் களையும் வெள்ளத்தில் சிக்கியுள் ளவர்களையும் மீட்பதற்கான ☞ 2

# வெறும் 24 நிமிட்களில் நேற்று நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

நாட்டில் நிலவும் கடும் மழையுடனான காலநிலைக்கு மத்தியில் மத்தியில் நேற்று காலை 9.00 மணிக்கு கூடிய நாடாளுமன்றம் 24 நிமிடங்கள் மட்டுமே நடந்த நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. ☞ 6

# யாழ். மாவட்டத்திலும் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்ட மழைக் காலநிலை காரணமாக மருதங்கேணியில் ஒருவர் உயிரிழந்தார் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

அந்தோணிபொன்னான்டோஎன்ற66வயதுமதிக்கத்தக்க முதியவரே உயிரிழந்துள்ளார். மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இவர் உயிரிழந்தார் என்று

யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நெடுந்தீவு மற்றும் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த இருவர் மழை வெள்ளத்தால் காயமடைந்துள்ளனர்.

# எம்.பி. பதவியைத் துறந்தார் மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் இஸ்மாயில் முத்து மொஹமட் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நேற்று முதல் பதவி விலகியுள்ளார்.

நாடாளுமன்றம்நேற்றுக்காலைசபாநாயகர்ஜகத் ☞ 2

# நான்கு திக்குகளையும் கலக்கியடித்த 'திக்வா'

'தித்வா' சூறாவளியின்தாக்கத்தால்நாடுமுழுவதும் பலத்த காற்றும் கனத்த மழையுடனான வானிலை தொடர்வதோடு, நேற்று கொழும்பில் உள்ள பல பகுதிகளில்வெள்ளப்பெருக்குமற்றும்வீதியில்மரங்கள் வீழ்ந்தமையால் போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்த பட்டிருந்தமுதுடன், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும்பாதிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாரிய ☞ 2

# இடர் முகாமைத்துவத்திற்கு தமிழ் அரசுக் கட்சி ஆதரவு

இடர் முகாமைத்துவத்துக்கு ஆளும்தரப்பு எடுக்கும் திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். இடர்த்தின் போது தற்காலிக முகாம்களுக்கு செல்லும் மக்கள் பல சிக்கல்களுக்கு முகங்கொடுக்கிறார்கள். அது குறித்தும் கவனம் செலுத்த வேண்டுமென இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின்மட்டக்களப்பு மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்சாணக்கியன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ☞ 2

# நாடாளுமன்றத்திற்குள்ளும் வெள்ளம் புகமென அச்சம்

நாடாளுமன்றத்தைச் சுற்றியுள்ள தியவன்ன ஓயாவின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்து வருவதால் நாடாளுமன்றத்தில் வெள்ள அபாயம் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் நாடாளுமன்ற ஊழியர்களும் அச்சமடைந்துள்ளனர்.

நீர்மட்டத்தை குறைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்களென புதிய ஜனநாயக முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க வலியுறுத்தினார். ☞ 6

# 25 வீதமான மின்விநியோகம் மழையினால் செயலிழப்பு

மழைக் காலநிலையால் 25 முதல் 50 சதவீதம் வரையில் மின்விநியோகம் செயலிழந்துள்ளது. பொதுப் பாதுகாப்பினை கருத்திற் கொண்டு பெரும்பாலான பகுதிகளின் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் அத்தியாவசிய இடங்களுக்கு மின்சாரம் வழங்குவது குறித்து தற்போது பரிசீலித்து வருகிறோம். சில தாமதங்கள் ஏற்படும். முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம் வழங்க வேண்டுமென ☞ 6

# பாதுகாப்பு அறிவுறுத்தல்களை மக்கள் பிசகின்றிப் பின்பற்றுக

### நீதி அமைச்சர் வலியுறுத்து

பாதுகாப்புஅறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கிறோமென நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர்ஹர்ஷணநாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது நாட்டில் நிலவும் இடர்நிலை குறித்து எதிர்க்கட்சியின் உறுப்பினர் அஜித் பி பெரோரா முன்வைத்தகோரிக்கைக்கு ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பாதிக்கப்பட்டுள்ளன. 61 ஆயிரத்து 175 குடும்பங்களைச்சேர்ந்த2லட்சத்து19ஆயிரத்து 282 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இறப்புக்கள் 69. காணாமற்போனவர்கள் 34. இடைத் தங்கல் முகாம்களின் எண்ணிக்கை 266, அவற்றில் 5 ஆயிரத்து 890 குடும்பங்களைச் சேர்ந்த 18 ஆயிரத்து 443 பேர் தங்கியுள்ளனர்.

இந்த விவரங்கள் எல்லாம் சரிதான். ஆனால் இவையெல்லாம் தற்போதைய நிலையில் மிக முக்கியமான துறையாக விளங்கும் இடர் முகாமைத்துவ நிலையத்தின் சிங்கள அறிக்கையில் மட்டுமே உண்டு. இலங்கையில்

நவம்பர் 16இல் இருந்து தொடங்கிய தொடர் மழை கடந்த சில தினங்களாகத் தீவிரமடைந்து வெள்ள நிலையை உருவாக்கியுள்ளது. இதையடுத்து மலையகத்தில் மண்சரிவுகள் ஏற்பட்டு அதிகமான உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அதிலும் தேயிலைத் தோட்டங்களில் உள்ள தமிழ் மக்கள் வாழும் பகுதியான பதுளையிலேயே மண்சரிவினால் ஒரேயிடத்தில் அதிகளவில் உயிரிழப்புக்களும் காணாமல்போதல்களும் இடம்பெற்றுள்ளன. கண்டி மாவட்டத்திலும் ஆங்காங்கே சிதறிச்சிதறி உயிர்இழப்புக்களும் காணாமற்போதல்களும் நிகழ்ந்துள்ளன.

இந்த நிலையில் தமிழ் பேசும் மக்களும் நிலமை என்ன என்பதைத் தேடித் தேடி அறிவதில் மும்முரமாக இருப்பர் என்பது வெளிப்படை. ஆனால், கடந்த சில தினங்களில் இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்ட அறிக்கைகள் அனைத்தும் சிங்களத்தில் மட்டுமே உள்ளன. வெள்ள நிலமை மோசமாகி, மண் சரிவுகள் ஏற்பட்டு உயிரிழப்புக்கள் அதிகரிக்கத் தொடங்கிய நிலையில் கடந்த மூன்று நாட்களுக்கும் மேலாக விடுத்துள்ள அறிக்கைகளில் ஒன்று மட்டுமே ஆங்கிலத்தில் உள்ளது. அதிலும்கூட ஒவ்வொரு மாவட்டத்திலும் பாதிப்பு எவ்வளவு என்கிற விவரம் மட்டுமே உள்ளது. வேறு எதுவும் இல்லை.

இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக தனது அறிக்கையில் குறிப்பிடும் இடர் முகாமைத்துவ நிலையம், அவற்றில் சிலவற்றிலாவது தமிழ் பேசும் மக்களும் இருக்கிறார்கள், அவர்களும் விவரங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற அறிவோடு நடந்துகொள்ளாமல் இருப்பது வெளும் 'பணிப் பழு' என்ற வகைக்குள் புறக்கணிக்கத்தக்கதல்ல.

இலங்கையின் ஒட்டுமொத்த மக்களும் ஆபத்துக்குள் சிக்கிக் கொண்டிருக்கும்போது நான் ஒருமொழியில் மட்டுமே அறிக்கைகளை விடுப்பேன் என்பது சாதாரணமாகப் புறமொதுக்கப்படக்கூடியதல்ல என்பது எனது உறுதியான கருத்து. அதுவும், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் மும்மொழிக்கொள்கையை மிகத்தீவிரமாக நடைமுறைப்படுத்துவோம் என்று காட்டுக் கூச்சல் போட்ட தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியிலேயே இவை நடக்கின்றன என்பது ஆச்சரியத்தையும் அவநம்பிக்கையையும் ஒருசேரத்தருகின்றன.

2016 - 2019 வரை இடம்பெற்ற புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான கலந்துரையாடல்களின்போது, தமிழுக்கும் சமஉரிமை என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்தாத அரசுத் துறை அதிகாரிகள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் புதிய சட்டங்கள் சேர்க்கப்படவேண்டும் என்று வலியுறுத்திய ஒருவர் அரசுத் தலைவராகப் பதவியில் இருக்கும்போதே, இலங்கையில் உயிராபத்தை எதிர்கொண்டிருக்கும் மக்களுக்காக அரச தரப்பு வெளியிடும் தகவல் அறிக்கையில் தமிழ் மொழிக்கு இடமேயில்லை என்பது, சிங்களத் தேசியவாதம் ஒருபோதும் இலங்கையில் ஏனைய தேசிய இனங்களை கணக்கிலும் எடுக்காது என்கிற அதிர்ச்சிகரமான உண்மையை இடித்துரைக்கிறது.

வெள்ளமும், மண்சரிவும் ஏற்படுத்தியுள்ள பேரதிர்ச்சியுடன் சேர்ந்து பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக தேசிய மக்கள் சக்தியின் இந்த மொழிக் கொள்கை அமுலாக்கம் என்னைக் கடுமையான அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. போரில் பல்லாயிரக்கணக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தபோது அந்தப் போர் அவசியமானது, நடத்தப்பட்டே ஆகவேண்டும் என்று வலியுறுத்திய ஜேவிபியின் செயலுக்கும் இன்றைய பேரிடரில் சிக்கி உயிர் ஆபத்தை எதிர்கொள்ளும் தமிழ் பேசும் மக்களுக்கும் சிங்களத்தில் மட்டுமே அறிக்கைகளை விடுக்கும் தேசிய மக்கள் சக்தியின் அணுகுமுறைக்கும் எந்த வித்தியாசத்தையும் என்னால் காணமுடியவில்லை.

அவசர கதியில் பணியாற்றும்போது தமிழ் மொழிபெயர்ப்பைப் பெற ஆளணிப் பற்றாக்குறை என்பது போன்ற காரணங்களை இன்றைய நவீன உலகில் ஏற்றுக்கொள்ளவே முடியாது. சிங்கள அறிக்கையை இன்றைய நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு ஓரிரு நிமிடங்களில் மொழிபெயர்த்து எடுத்துவிடமுடியும். அவற்றைச் செம்மை பார்த்து, திருத்தி ஒரே நேரத்தில் அறிக்கையை விடுவதற்கு அதிக ஆளணியும் சக்தியும் நேரமும் தேவைப்படாது. அதனைக் கருத்தில்கொள்ளாமல் நடப்பதற்குப் பெயர் பணிச் சுமை அல்ல, அலட்சியம். சிங்களப் பெருந்தேசியவாதத்தின் அலட்சியம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வெள்ளம்,....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

வெள்ளிக்கிழமை அதிகரித்து வரும் வெள்ளத்தில் சிக்கித் தவித்த நூற்றுக் கணக்கான மக்களை மீட்க இலங்கைப் படையினர் விரைந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்,

ஹெலிகாப்டர்கள் மற்றும் கடற்படை படகுகள் மீட்புப் பணிகளை மேற்கொண்டன, மரங்களின் உச்சிகளிலும், கூரைகளிலும், வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட கிராமங்களிலும் இருந்து மக்கள் மீட்கப்பட்டு வருகின்றனர்.

இந்த வாரம் ஏற்பட்ட மண்சரிவுகளினாலேயே பெருமளவான உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று பேரிடர் முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

தீவு முழுவதும் மழை பெய்து வருகிறது, சில பகுதிகளில் கடந்த 24 மணி நேரத்தில் 360 மிமீ மழை பெய்துள்ளது

தலைநகர் கொழும்பும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. 56 வயதான ரத்நாயக்க, கொழும்பு அருகே உள்ள கடுவெலவில் உள்ள தனது வெள்ளத்தில் மூழ்கிய வீட்டை விட்டு வெளியேற வேண்டியிருந்தது என்று கூறினார்.

'இது கடந்த மூன்று தசாப்தங்களில் எங்கள் பகுதியில் ஏற்பட்ட மிக மோசமான வெள்ளமாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்,' என்றார். '1990களில் என் வீடு 7 அடிக்கு கீழ் தண்ணீரில் மூழ்கியிருந்தபோது ஏற்பட்ட வெள்ளம் எனக்கு நினைவிருக்கிறது' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடுவெலவைச் சேர்ந்த 48 வயதான கல்யாணி, வீடுகள் வெள்ளத்தில் மூழ்கிய இரண்டு குடும்பங்களுக்குத்தான் அடைக்கலம் கொடுத்துள்ளார் என்று கூறினார்.

பைகள் மற்றும் குடைகளை ஏந்தி கணுக்கால் ஆழமான நீரில் அலைந்து திரிந்த மக்கள் கூட்டத்தை ஒளிப்படங்களிலும் காணொலிகளிலும் தாராளமாகப் பார்க்கக் கிடைக்கிறது.

கொழும்புக்கு அருகிலுள்ள வெல்லம்பிட்டியில் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

மண்சரிவுகள் மற்றும் வெள்ளத்தில் குறைந்தது 3,000 வீடுகள் சேதமடைந்துள்ளன, மேலும் 18,000 க்கும் மேற்பட்டோர் தற்காலிக தங்குமிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். அனுராதபுரம் மாவட்டத்தில், உயரும் நீரில் இருந்து தப்பிக்க தென்னை மரத்தில் ஏறிய ஒருவரை பெல் 212 ஹெலிகாப்டர் மூலம் படையினர் மீட்டனர்.

'திக்வா' சூறாவளி ஞாயிற்றுக்கிழமைக்குள் வடக்கிலிருந்து தென்னிந்திய மாநிலமான தமிழ்நாட்டை நோக்கி நகர வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட உயிர் இழப்பு குறித்து இந்தியப் பிரதமர்

2016ஆம் ஆண்டு நாடு முழுவதும் 71 பேர் கொல்லப்பட்ட வெள்ளத்தைவிட இந்தமுறை நிலமை மோசமாக இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். வெள்ளிக்கிழமை தேயிலை வளரும் மத்தியப் பகுதிகளில் இருந்து டஜன் கணக்கான சுற்றுலாப் பயணிகள் கொழும்புக்கு வெளியேற்றப்பட்டனர்.

பல இடங்களிலும் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் மீட்புப்பணிகளும் இடர்களைச் சந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. 'நாங்கள் ஒன்றரை வயதுக் குழந்தை உட்பட ஆறு பேர். படிக்கட்டுகளில் சிக்கிக் கொண்டிருக்கின்றோம். இன்னும் ஐந்து படிகள் மேலே தண்ணீர் உயர்ந்தால், நாங்கள் எங்கும் செல்ல முடியாது' வெள்ளத்தில் மாட்டிக் கொண்ட பெண் ஒருவர் 'சிரச' தொலைக்காட்சிக்குத் தொலைபேசி மூலம் கூறினார்.

## இந்தியப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவிகள் இந்திய ஆளும்தரப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்தியாவின் 'சாகர் பந்து' திட்டத்தின் கீழேயே மேற்படி உதவி வழங்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி தற்போது வழங்கப்பட்டுள்ள உதவிகளில் 4.5 தொன் உலர் உணவுப் பொருட்கள், 2 தொன் ஏனைய உணவுப்பொருட்கள், உடன் உணவுப்பொதிகள், பால் மற்றும் வெதுப்பக உற்பத்திப்பொருட்கள், குடிபானங்கள் மற்றும் குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய ஏனைய போசணைப்பதார்த்தங்கள் என்பன உள்ளடங்குகின்றன. அவற்றுடன் ஏனைய அத்தியாவசியப் பொருட்களும் இலங்கை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இவ்வுதவிகள் தற்போது இலங்கைக் கடற்பரப்பில் தரித்து நிற்கும் ஐ.என்.எஸ்.விக்ராந்த் மற்றும் ஐ.என்.எஸ்.உதயகிரி ஆகிய இந்திய விமானந்தாங்கிக் கப்பல்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

தற்போதைய கடினமான சூழ்நிலையில் இலங்கை மக்களுடன் இந்திய உடன்நிற்கிறது. 'அயலகத்துக்கு முதலிடம்' எனும் கொள்கையின் பிரகாரம் இவ்வேளையில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கு இந்தியா தயாராக இருக்கிறது. இந்நிலைவரம் தீவிரமடையும் பட்சத்தில் இலங்கை அரசாங்கத்துடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி அடுத்தகட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும்.

## நான்கு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ள இடர் ஏற்பட்டிருந்ததுடன், தொடரும் வானிலையால் கொழும்பு வரலாறு காணாத மோசமான வெள்ளத்தை சந்திக்க நேரிடுமென நீர்ப்பாசனத் திணைக்களம் எதிர்வுக் கூறியுள்ளது.

வங்காள விரிகுடாவில் இலங்கையின் தென் கிழக்குப் பகுதியை அண்மித்த கடற்கரையில் ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு நிலை சூறாவளியாக வலுபெற்று தற்போது நிலப்பகுதியை ஊடறுத்து வடமேற்கு நோக்கி நகர்கின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் (27) கொழும்பில் பொழிந்த கன மழை மற்றும் கடுங்காற்று காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. காற்றில் பிரதான வீதிகளில் மரங்கள் முறிந்து விழுந்திருந்ததுடன், வீடுகள், கடைகள், நிறுவனங்கள் என பலவற்றுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டிருந்தது.

நேற்றுக் காலை கொழும்பில் பல பகுதிகளில் மழை நீர் வழிந்தோடமால் தேங்கி வெள்ளம் ஏற்பட்டிருந்ததை காணக் கூடியதாக இருந்தது. காற்றின் வேகத்தில் அள்ளுண்டு செல்லப்பட்ட தகரங்கள், வர்த்தக நிலையங்களின் பெயர் பலகைகள், பதாதைகள் என பல பொருட்கள் வீதிகளில் காணக்கிடைத்தன. போக்குவரத்துக்கு தடையாக இருந்த பொருட்களை பொலிஸார், இராணுவத்தினர் உடனடியாக செயற்பட்டு அப்புறப்படுத்தியிருந்தனர். அதிகமழை காரணமாக களனி கங்கை பெருக்கெடுத்துள்ளமையால் கடவத்தை முதல் கடுவெலவரையிலான அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கால் கடவத்தை அதிவேக நெடுஞ்சாலையின் வாயில் நீரில் மூழ்கியுள்ளமையால் போக்குவரத்து மீள் அறிவிப்பு வரும் வரை நிறுத்தப்பட்டுள்ளது. அத்தோடு தேசிய வைத்தியசாலையின் 4 ஆம் இலக்க நுழைவாயில் வீதி, எல்விட்டிகள மாவத்த வீதி, ரெஜின வீதி சந்தி, கொட்டாஞ்சேனை மற்றும் பிரேமசிரி கோமதாச மாவத்தை ஆகிய வீதிகளில் போக்குவரத்து தடைபட்டது. வீதிகளில் முறிந்துகிடந்த மரக்கிளைகள் மற்றும் விழுந்துக் கிடந்த மரங்கள் ஆகியவற்றை இராணுவத்தினர் மற்றும் இடர் முகாமைத்துவ பணியாளர்களால் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

களனி கங்கையின் நீர்மட்டம் நேற்றைய தினம் உயர்வடைந்திருந்த நிலையில் களணி கங்கையை அன்டிய தாழ் நிலப்பகுதிகள் நீரில் மூழ்கியிருந்தன. வத்தளை, களணி, வெல்லம்பிட்டி, கொலன்னாவ, சேதுவத்தை, தெமட்டகொடை, நவகம்புர மற்றும் அவிசாவல்லை ஆகிய பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. அவிசாவளையில் உள்ள நீர்மானிப்படி 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாரிய வெள்ள இடர் ஏற்பட்டிருந்ததுடன், தொடரும் வானிலையால் கொழும்பு வரலாறு காணாத மோசமான வெள்ளத்தை சந்திக்க நேரிடும் என நீர்ப்பாசனத் திணைக்களம் எதிர்வுக் கூறியுள்ளது.

அதனையடுத்து களணி கங்கையை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் உடனடியாக பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டதுடன், நேற்றைய தினம் களணி கங்கையை அன்மித்த அவதானமிக்க பகுதியிலிருந்த மக்களை அங்கிருந்து அப்புறப்படுத்த பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## பாதுகாப்பு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா, அநுராதபுரம் - புத்தளம் வீதி கலாவெல பாலத்துக்கு மேல் 70 பயணிகளுடன் பேரூந்து ஒன்று ஒன்றரை மணித்தியாலமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டினார். நெருக்கடிக்குள்ளானவர்களை மீட்பதற்கு ஹெலிகொப்டரை பயன்படுத்துவதற்கு விரைவாக அனுமதி வழங்கப்படவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. அது கவலைக்குரியது.

களுத்துறை மாவட்டத்துக்கும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. களுத்துறை பகுதியில் பெரும்பாலான பகுதிகள் நீரில் மூழ்கும் நிலையில் உள்ளன. ஆகவே அப்பிரதேசங்களுக்கும் உதவியளியுங்கள் - என்றார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா குறிப்பிடும் விடயம் சரியானதே, அச்சந்தர்ப்பத்தில் அப்பகுதிக்குச் செல்லவேண்டாம் என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் அந்த பேரூந்தின் சாரதிக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நெருக்கடிக்குள்ளானவர்களை பாதுகாப்பாக மீட்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மீட்பு பணியினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

## இடர் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற அமர்வின்போது நாட்டில் நிலவும் இயற்கை இடர் நிலைமை குறித்து உரையாற்றுகையில் நேற்று

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

நாட்டில் நிலவும் இயற்கை இடர்ங்களுக்கு மத்தியில் இடர் முகாமைத்துவத்துக்கு ஆளும்தரப்பு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நன்றித் தெரிவித்துக் கொள்கிறோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களும் இந்த இடர்த்தால் பாதிக்கப்பட்டுள்ளது. மலையகப் பகுதிகளில் தற்போது பொழியும் மழை நீர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஊடாகவே கடலுக்குச் செல்லும்.

இடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தற்காலிக முகாம்களுக்குச் செல்லும் போது பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கிறார்கள். வீட்டை விட்டுச் சென்றால் வீட்டில் உள்ள பொருட்கள் திருடுபோய்விடுமோ என்றும் அச்சமடைகிறார்கள். ஆகவே இவ்வாறான பிரச்சினைகள் குறித்தும் ஆளும்தரப்பு கவனம் செலுத்த வேண்டும்.

பிரதேச சபைத் தலைவர்களை நியமிக்கும்போது தகுதியானவர்களை நியமியுங்கள் .தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை இந்த பதவிகளுக்கு நியமித்துள்ளீர்கள். அவர்கள் நாங்கள் சொல்வது எதையும் கேட்பதில்லை தன்னிச்சையாக செயற்படுகிறார்கள் - என்றார்.

## எம்.பி.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமரத்ன தலைமையில் கூடிய போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதை உத்தியோகபூர்வமாகச் சபைக்கு அறிவிக்கிறேன். தேசியப் பட்டியல் மூலம் கிடைத்த இந்தப் பதவியிலிருந்து 2025.11.28 விலகுகின்றேன்.

இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களுக்கு நாடாளுமன்ற

தொடர்ச்சி 6ம் பக்கம்....


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எச்சரிக்கைக்குச் செவிமடுக்காத நாடு

இலங்கை கடந்த சில வாரங்களாகவே புதியதல்லாத ஒரு தேசிய துயரத்தை மீண்டும் அனுபவித்து வருகிறது. வடக்கிலும், கிழக்கிலும், மத்திய மலைப் பகுதிகளிலும், பல மாவட்டங்களில் தொடர்ச்சியான கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளமும் மண் சரிவும் நூற்றுக்கணக்கான குடும்பங்களை இடம்பெயரச் செய்துள்ளன. வீடுகள் இடிந்து நொறுங்கியுள்ளன. சாலைகள் முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளன. விவசாய நிலங்கள் நீரில் மூழ்கி, மக்களின் வாழ்வாதாரம் மீண்டும் ஒருமுறை தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. நேற்றுவரையில் 69 பேர் அநியாயமாக உயிரிழந்துள்ளனர். 34 பேர் காணாமல் போயுள்ளனர். எனினும், ஆண்டுதோறும் மழைக் காலங்களில் நிகழும் இந்தப் பேரழிவுகள் நாட்டின் திட்டமின்மையையும், முன்கூட்டியே எச்சரிக்கும் நிபுணர்களின் குரலையும் கேட்க மறுக்கும் ஆட்சிப் பொறுப்பாளர்களின் அலட்சியத்தையும் வெளிப்படுத்துகின்றன.

வெள்ளமும் மண் சரிவும் இயற்கை நிகழ்வுகள். ஆனால் அவை இத்தகையப் பேரழிவுகளாக மாறுவதற்கான முக்கியக் காரணம் மனிதர் செய்த தவறுகளே என்பதை மறுத்து நிற்க முடியாது. மலைப் பகுதிகளில் கட்டுப்பாடின்றி நடைபெறும் சேதம், தடுப்பணை அமைப்புகளில் வருடாந்தப் பராமரிப்பு குறைவு, மழைநீர் வடிகால் அமைப்புகளின் துருப்பிடித்த நிலை, நகரங்களில் திட்டமிடப்படாத குடியிருப்புகள் – இவையெல்லாம் சங்கிலித் தாக்கம் போல ஒன்றோடொன்று இணைந்து இந்தப் பேரழிவுகளை உருவாக்குகின்றன.

இயற்கை எங்களுக்கு எச்சரிக்கைகளை பலமுறை கொடுத்துள்ளது. ஆனால் அரசியல் முன்னுரிமைகளில் இது ஒருபோதும் முதலிடத்தைப் பெறவில்லை.

இந்தமுறை ஏற்பட்ட வெள்ளப் பிரச்சினை பரீட்சைகளை ஒத்திவைக்கப்பண்ணியுள்ளது. பணிக்கு செல்ல முடியாத நிலையை உருவாக்கியது. அவசர சேவைகள்கூட சில இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையைச் சாலைகள் அடைந்திருந்தன. கடுகண்ணாவ, பதுளை, நுவரெலியா பகுதிகளில் இடம்பெற்ற மண் சரிவுகள் பல உயிர்களைப் பறித்தன. இந்த இறப்புக்கள்'இயற்கையின் கோபம்' என்று சொல்லப்படுவதற்கு முன், அவற்றைத் தடுப்பதற்குரிய மனிதப் பொறுப்புகள் எவ்வளவு தூரம் நிறைவேற்றப்பட்டன என்பதையும் சிந்திக்க வேண்டியது அவசியம்.

உயிரிழப்புகளைத் தவிர்க்க இயற்கை பேரிடர் முகாமைத்துவ நிலையம் (DMC) ஒவ்வொரு ஆண்டும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அறிவிக்கிறது. ஆனால் பல கிராமங்களில் அந்த அறிவிப்புகள் மக்களை சென்றடைவதே அரியதாக இருக்கின்றது. சில பகுதிகளில் மக்கள் ஆபத்தான சரிவுப் பகுதிகளில் வீடுகளை கட்ட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அரசின் நிலப் பகிர்வு திட்டங்களில் சுற்றுச்சூழல் ஆய்வுகள் சரியாக மேற்கொள்ளப்படாமையும் அவர்களுக்கு உரிய காணிகளை அடையாளப்படுத்து வழங்காமையும் இத்தகைய ஆபத்தான குடியிருப்புகளை உருவாக்கியுள்ளது.

வெள்ளப் பிரச்சினையின் மற்றொரு பரிமாணம், வடிகால் அமைப்புகளின் செயலிழப்பு. கொழும்பு முதல் யாழ்ப்பாயம் வரை பல நகரப் பகுதிகளில் ஆண்டு முழுவதும் குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன. மழை வரும்போது அதே குப்பைகள் நீரேற்றத்தைத் தடுத்து நகரங்களை நீரில் மூழ்கடிக்கின்றன. இது ஒரு அபராதத்தால் தீர்க்க வேண்டிய பிரச்சினை அல்ல; இது திட்டமிடப்பட்ட நகர மேலாண்மைக்கான அடிப்படைத் தேவையை உணர்த்தும் இடமாகும்.

இந்தக் கட்டத்தில், மீண்டுமொரு அடிப்படை கேள்வி எழுகிறது: ஏன் நாம் ஒவ்வொரு மழைக்காலத்திலும் இதே நிலையைச் சந்திக்கிறோம்? காரணம், நீண்டகாலத் திட்டமிடல் இல்லாதது. பத்து வருடத்திற்கொரு முறை நடைபெறும் தேர்தலில் அடங்காத திட்டங்கள் அரசின் முன்னுரிமையாக மாறுகின்றன; ஆனால் பல்லாண்டுகளுக்கான பொதுமக்கள் பாதுகாப்புத் திட்டங்கள் பெரும்பாலும் அடுக்கிலே தூசிபட்டுக் கிடக்கின்றன.

வெள்ளத்தையும் மண் சரிவையும் முழுவதும் தவிர்க்க முடியாது. ஆனால் அவற்றின் விளைவுகளை மிகத் தீவிரமாகக் குறைக்க முடியும். அதற்காக சில அடிப்படை நடவடிக்கைகள் அவசியம்:

. காடழிப்பை முழுமையாகத் தடுக்கக் கடுமையான சட்டங்களை அமல்படுத்த வேண்டும்.

. மழைநீர் வடிகால் அமைப்புகளை நவீனப்படுத்தி, வருடாந்திர பராமரிப்பை கட்டாயமாக்கவேண்டும்.

. ஆபத்தான சரிவுப் பகுதிகளில் வீடுகளைத் தடைசெய்து, மாற்று பாதுகாப்பான குடியிருப்புகளை வழங்கவேண்டும்.

. தரமான வரைபட ஆய்வுகளின் அடிப்படையில் நகர திட்டமிடல் செய்யவேண்டும்.

. ஊடகங்கள், பாடசாலைகள், கிராம அமைப்புகள் மூலம் பேரிடர் முன்னெச்சரிக்கை கல்வியை பொதுமக்களுக்கு அணுகுமுறையாக மாற்ற வேண்டும்.

இலங்கை ஒரு சிறிய தீவு நாடு என்றாலும், நாங்கள் சந்திக்கும் சுற்றுச் சூழல் ஆபத்துகள் மிகப் பெரியவை. எதிர்கால தலைமுறைகள் பாதுகாப்பாக வாழ வேண்டுமெனில், பேரிடர் மேலாண்மை என்பது 'பின்னர் செய்ய வேண்டிய வேலை' அல்ல; இன்றே தொடங்க வேண்டிய தேசிய முன்னுரிமை ஆகும்.

வெள்ளமும் மண் சரிவும் மீண்டும் மீண்டும் நமக்கு ஆணித்தரமாகச் சொல்லும் உண்மையொன்று உள்ளது: இயற்கையை நாம் மாற்ற முடியாது; ஆனால் அதன் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு எங்களிடமே உள்ளது.

# களனி கங்கையில் நீர் மட்டம் அதிகரிப்பு தலைநகர் கொழும்பும் மூழ்கும் அபாயம்

## இன்றிரவு வெள்ளம் புகும் என எச்சரிக்கை

களனி கங்கையின் நீர் மட்டம் அதிகரிப்பதால் கொழும்பில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்படக் கூடும். 2016ஆம் ஆண்டுக்கு பின்னர் ஏற்படும் மிகப் பெரிய வெள்ள இடர்மாக இது பதிவாகும். எனவே களனி கங்கையை அண்மித்த பகுதிகளில் வசிப்போர் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும், தமது கல்வி சான்றிதழ்கள் உள்ளிட்ட அத்தியாவசிய முக்கிய ஆவணங்களை பத்திரப்படுத்துமாறு அறிவுறுத்தப்படுவதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் குணசேகர தெரிவித்தார்.

இராணுவத்தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் காணப்படும் சுமார் 50க்கும் மேற்பட்ட பாரிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அதேபோன்று சாதாரண நீர்த்தேக்கங்களின் வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. தெதுருஓயா நீர்த்தேக்கத்திலேயே அதி கூடிய நீர் மட்டம் பதிவானது. எனினும் தற்போது (நேற்று காலை) நிலைமை சற்று வழமைக்கு திரும்பியது. எனவே அதனால் அபாய நிலைமை இல்லை. எவ்வாறிருப்பினும் செக்கனுக்கு இலட்சம் கன மீற்றர் வேகத்தில் நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் பாதெனிய - அநுராதபுரம் வீதி முற்றாக நீரில் மூழ்கியுள்ளது.

அநுராதபுரத்தில் நாச்சியாதூவ நீர்த்தேக்கம் உள்ளிட்டவற்றிலும் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் அநுராதபுரம் நகரத்தை அண்மித்த பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. புத்தளத்தில் இங்கினிமிட்டிய மற்றும் தப்போவா நீர்த்தேக்கங்களில் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் அநுராதபுரம் வீதி மற்றும் புத்தளம் நகர் நீரில் மூழ்கியுள்ளது. தெதுருஓயாநீர்த்தேக்கத்தின்வான்கதவுகள்திறக்கப்பட்டுள்ளதால் சிலாபம் நகர் நீரில் மூழ்கக் கூடிய வாய்ப்புள்ளது.

யான் ஓயா, பதவிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதால்ஹொரவ்பொத்தான,கெப்பிதிகொல்லாவ, பதவிஸ்ரீபுர பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன. சேனாநாயக்க சமுத்திரத்தின் வான் கதவுகள் திறக்கப்படா போதிலும், அதன் நீர் மட்டமும் உயர்வடைந்துள்ளது. கல்ஓயா முழுமையாக நீரில் மூழ்கியுள்ளது. சேனாநாயக்க சமுத்திரத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டால் வயல் முற்றாக நீரில் மூழ்கும். எனவே மழை வீழ்ச்சி சற்று குறைவடையும் வரை காத்திருக்கின்றோம்.

களனி கங்கையின் நீர் மட்டமானது 2016ஐ விட அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இன்று சனிக்கிழமை இரவு கொழும்பில் பெரும் வெள்ள நிலைமை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே கொழும்பில் வசிப்போர் தமது கல்வி சான்றிதழ்கள், வாகனங்கள் உள்ளிட்ட அத்தியாவசியமானவற்றைப் பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

இவை தவிர கின் கங்கையின் நீர் மட்டமும் உயர்வடையக் கூடும். நில்வளா கங்கை ஆபத்தான நிலைமையில் இல்லை. வெஹெரகல மற்றும் மாணிக்க கங்கையை அண்மித்த பகுதிகளில் வெள்ளம் ஏற்படக் கூடும் என்றார்.

இதேவேளை இது குறித்து நேற்றைய தினம் கொழும்பு டேம் வீதியிலுள்ள பிரதேச செயலகத்தில் மேல் மாகாண ஆளுநர் தலைமையில் விசேட கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றது. அதற்கமைய மட்டக்குளி, முகத்துவாரம், மாவத்தை, மாதம்பிட்டி உள்ளிட்ட பகுதிகளிலுள்ளவர்கள் உடனடியாக அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டது. கொழும்பு மாநகரசபையால் தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் 36 குளங்கள் வான்பாயும் நிலையில்

## சில உடைப்பெடுக்கும் அபாயம்

வடக்கு மாகாணத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட 36 குளங்கள் வான் பாயும் நிலையை அடைந்துள்ளதுடன், சில குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன. பொதுமக்களின் பாதுகாப்பைக்கருத்திற்கொண்டு அவசர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி இராஜகோபு தெரிவித்தார்.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் அவர் வெளியிடப்பட்ட நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாங்குளம் மற்றும் வவுனியா பகுதிகளில் சடுதியான அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இன்று காலை 9.00 மணி வரையிலான 24 மணித்தியாலத் தரவுகளின்படி: மாங்குளம்: 378.5 மி.மீ, முத்துஐயன்கட்டு: 342 மி.மீ, வவுனியா: 340 மி.மீ, சேமமடு: 135 மி.மீ என்று மழை பதிவாகியுள்ளது.

இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 26'-10' அடியை எட்டியுள்ளது. குளத்துக்கு வரும் நீரின் அளவு சடுதியாக அதிகரித்து வருவதால், குளத்துக்கு ஏற்படக்கூடிய அபாயத்தைத் தவிர்க்கவும், கீழ்ப்பகுதி வெள்ள இடர்களைத் தவிர்க்கவும் வெள்ளி காலை 6.00 மணி முதல் 8 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. தற்போது மணித்தியாலத்துக்கு 6.281 மில்லியன் கன மீற்றர் நீர் குளத்துக்குள் வருகின்றது. நீர்மட்டம் 28'-6' அடியை அடைந்தால் எஞ்சிய 6 கதவுகளும் திறக்கப்படும்.

அதிக மழைவீழ்ச்சி காரணமாக வவுனியா மாவட்டத்திலுள்ள சில குளங்கள் உடைப்பெடுக்கும் நிலையை அடைந்துள்ளன. பம்பைமடு குளம்: 34 அங்குல மேலதிக நீர் வான் பாய்வதால், குளம் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டது. இதனையடுத்து அணையைப் பாதுகாக்கவும் ஆபத்தைக் குறைக்கவும் வான் வழிவாய்க்காலுக்கான தடுப்பணையின் ஒரு பகுதி நேற்று வெட்டிவிடப்பட்டது.

கனகராயன்குளம் மற்றும் அலியா மருதமடு: இக்குளங்களும் உடைப்பெடுக்கும் அபாயத்தில் உள்ளதால், அவற்றின் வால்கட்டுப் பகுதிகள் மற்றும் அணைகளை வெட்டி நீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனிக்குளம் (27'-10') மற்றும் தேறாங்கண்டல் குளம் என்பன வான் பாய்கின்றன. முத்துஐயன்கட்டு குளத்தின் நீர்மட்டம் 23'-00' (92%) ஆக உள்ள நிலையில் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக 54 நடுத்தர மற்றும் பெரும் குளங்களில் 36 குளங்கள் வான் பாய்கின்றன.

தண்ணிமுறிப்பு, மடவாளசிங்கம், மருதமடு, கனுக்கேணி ஆகிய குளங்களுக்கு உத்தியோகத்தர்கள் சென்றுள்ள போதிலும், தொலைத்தொடர்பு வலையமைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதால் தொடர்புகளைப் பேண முடியவில்லை எனப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியான கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர் - என்றுள்ளது.

# பிரதேச செயலர் பிரிவுகளுக்கு தலா ரூ. 50 மில்லியன் நிதி

மழைக் காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணமளிப்பதற்கு பிரதேச செயலாளருக்கு 50 மில்லியன் ரூபா வரையில் செலவழிப்பதற்குரிய நிதி தத்துவங்களை வழங்குவதற்கு மாவட்ட செயலாளர் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தி திறைசேரியின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியபெரும செலவு தொடர்பான சுற்றறிக்கையை சகல மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

வெளியிடப்பட்டுள்ள செலவு சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில்ஏற்பட்டுள்ளஅவசரநிலைமையால்பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குவிரைவாகநிவாரணமளிப்பதற்குஉரியபண்டங்கள், செயற்பாடுகள் மற்றும் ஆலோசனையற்ற சேவைகளுக்கு உரிய பெறுகை வழிமுறைகள் மற்றும் கையேடு -2024 இல் குறிப்பிடப்பட்டுள்ள 3.1.8 பிரிவுக்கமைய செயற்படுமாறு இதனூடாக அறிவுறுத்தப்படுகிறது.

இதற்கமைய பிரதேச செயலாளர் மேற்குறிப்பிட்டபட்ட வழிமுறைகள் மற்றும் கையேட்டின் 2.9இன் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள வரையறையான 50 மில்லியன் ரூபா வரையான பெறுகை நடவடிக்கைகளை எவ்வித தடைகளுமின்றி விரைவாக மேற்கொள்ள முடியும் என பெறுகை ஆணைக்குழுவினால் அறிவுறுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட 2 ஆவது பந்தியில் குறித்துரைக்கப்பட்டதற்கமைய செயற்படுவதற்கு பிரதேச செயலாளருக்கு 50 மில்லியன் ரூபா வரையில் செலவழிப்பதற்கு கூடிய வகையில் நிதி தத்துவங்களை வழங்குவதற்கு மாவட்ட செயலாளர் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு மேலதிகமாக இடர்த்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணமளிப்பதற்கு மேலும் செலவழிக்க வேண்டுமாயின் அது குறித்த விபரங்களை மாவட்டச் செயலார்கள் பாதுகாப்பு அமைச்சு, அசர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு விரைவாக அறிவுறுத்தல வேண்டும்.

இந்த செலவுச் சுற்றறிக்கையின் பிரதிகள் அரசுத் தலைவர் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்,பிரதமரின் செயலாளர், அமைச்சரவையின் செயலாளர், பெறுகை ஆணைக்குழுவின் தலைவர், அரச நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சின் செயலாளர்,கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# வெளிநாடுகள் இலங்கைக்கு ஆதரவு

இலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் புயலின் விளைவாக உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கான தமது ஆழ்ந்த அனுதாபத்தை வெளிப்படுத்தியிருக்கும் உலகநாடுகளின் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள், இக்கடினமான தருணத்தில் தமது நாடுகளின் அரசுகளும் மக்களும் இலங்கையுடன் உடன்நிற்பதாகத் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையின் விளைவாகப் பலர் உயிரிழந்திருப்பதுடன், பெருமளவான சொத்துக்கள் சேதமடைந்துள்ளன. நாடளாவிய ரீதியில் தொடர்ந்து மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டோருக்கான அனுதாபத்தையும், இக்கடினமான வேளையில் தமது உடன்நிற்பையும் வெளிப்படுத்தி உலகநாடுகளின் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் தமது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளப்பக்கங்களின் பதிவுகளைச் செய்துள்ளனர்.

### மாலைதீவு அரசுத் தலைவர்

'இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையினால் பதிவாகியிருக்கும் உயிரிழப்புக்கள் மற்றும் சொத்துச்சேதங்கள் தொடர்பில் மிகுந்த கவலையடைகிறேன். இக்கடினமான சூழ்நிலையில் மாலைதீவு மக்கள் இலங்கையுடன் உடன்நிற்கிறார்கள். அத்தோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் கூறிக்கொள்கிறோம்' என மாலைதீவு அரசுத் தலைவர் மொஹமட் முய்ஸு பதிவிட்டுள்ளார்.

### அமெரிக்கத் தூதுவர்

'இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் மண்சரிவு இடர்த்தின் விளைவாக உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட சகலருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும். பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு அவசியமான உதவிகளை வழங்குவதை முன்னிறுத்தி அயராது உழைக்கும் அதிகாரிகள், முப்படையினர், தன்னார்வலர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். சகலரும் பாதுகாப்பாக இருப்பதுடன், உத்தியோகபூர்வ அறிவிப்புக்களைப் பின்பற்றி செயற்படுங்கள்' என இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் அவரது பதிவில் அறிவுறுத்தியுள்ளார்.

### பிரித்தானிய உயராணியர்

'இடர்நிலை தொடர்பான பிரதமரின் விளக்கமளிப்பில் கலந்துகொண்டேன். இந்த நெருக்கடி நிலையை உரியவாறு கையாள்வதற்கு ஆளும்தரப்பும், அவசரசேவைக் கட்டமைப்புக்களும் கடுமையாக செயலாற்றிக்கொண்டிருக்கின்றன என்பதை அறிவேன். இருப்பினும் கவலைக்குரிய வகையில் பலர் உயிரிழந்திருக்கிறார்கள். அதேவேளை சுற்றுலாப்பயணிகளைப் பாதுகாப்பதற்கான சமாந்தர நடவடிக்கைகள் தொடர்பில் ஆளும்தரப்பு அறிவித்திருக்கிறது. சுற்றுலாப்பயணத்தளங்கள் தற்போது மூடப்பட்டிருக்கின்றன. இலங்கையிலுள்ள பிரித்தானிய சுற்றுலாப்பயணிகள் உரிய பயண வழிகாட்டல்களைப் பின்பற்றி செயற்படவேண்டும்' இலங்கைக்கான பிரித்தானிய உயராணையர் அன்ட்ரூ பற்றிக் வலியுறுத்தியுள்ளார்.

### பாகிஸ்தான் உயராணையரகம்

'இலங்கையில் நிலவும் சூறாவளி மற்றும் கடுமையான மழைவீழ்ச்சி உள்ளிட்ட சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுடனும், ஆளும்தரப்புடனுமான பாகிஸ்தான் ஆளும்தரப்பு மற்றும் மக்களின் உடன்நிற்பை வெளிப்படுத்துகிறோம்' என இலங்கையிலுள்ள பாகிஸ்தான் உயராணையரகம் தெரிவித்துள்ளது

# இந்தியப் பிரதமர் மோடி அனுதாபம் தெரிவிப்பு

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையினால் தமது அன்புக்குரியவர்களை இழந்திருக்கும் குடும்பங்களுக்கு அனுதாபத்தை வெளிப்படுத்தியிருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 'சாகர் பந்து' திட்டத்தின்கீழ் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பொருட்கள் மற்றும் அவசியமான மனிதாபிமான உதவிகள், இடர்நிவாரணங்களை உடனடியாக அனுப்பிவைத்திருப்பதாக அறிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையின் விளைவாக பலர் உயிரிழந்திருப்பதுடன், பெருமளவான சொத்துக்கள் சேதமடைந்துள்ளன. நாடளாவிய ரீதியில் தொடர்ந்து மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டோருக்கான அனுதாபத்தையும், இக்கடினமான சூழ்நிலையில் இந்தியாவின் உடன்நிற்பையும் வெளிப்படுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவரது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளப்பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார்.

'தித்வா சூறாவளி காரணமாக தமது அன்புக்குரியவர்களை இழந்து தவிக்கும் இலங்கை மக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரித்துக்கொள்கிறேன். அத்தோடு பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பாதுகாப்பு, நலன் மற்றும் துரித மீட்சிக்காகப் பிரார்த்திக்கிறேன்' என அவர் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை 'எமது மிகநெருங்கிய அயல்நாட்டுடனான உடன்நிற்பை வெளிப்படுத்தும் வகையில் 'சாகர் பந்து' திட்டத்தின்கீழ் நிவாரணப்பொருட்கள் மற்றும் அவசியமான மனிதாபிமான உதவிகள், இடர்நிவாரணங்களை இந்தியா உடனடியாக அனுப்பிவைத்துள்ளது. இந்நிலைவரம் தீவிரமடையும் பட்சத்தில் அவசியமான மேலதிக உதவிகளையும், ஒத்துழைப்பையும் வழங்குவதற்குத் தயாராக இருக்கிறோம்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் 'அயலகத்துக்கு முதலிடம் மற்றும் 'விஷன் மகாசாகர்' ஆகிய கொள்கைகளின் பிரகாரம் மிக அவசியமான இத்தருணத்தில் இலங்கையுடன் இந்தியா உடன்நிற்கும் எனவும் பிரதமர் மோடி அப்பதிவில் உறுதியளித்துள்ளார்.



## எம்.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் என்ற அடிப்படையில் அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறேன். அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிசாத் பதியூதின் மற்றும் கட்சியின் உயர்பீடத்துக்கும், கட்சி ஆதரவாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுத் தலைவர், பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றப் பணி குழாமினர் உள்ளிட்ட சகல தரப்பினருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கையில் கட்சியின் கொள்கை மற்றும் கோட்பாடுகளுக்குக் கட்டுப்பட்ட வகையில் கட்சிக்கு துரோகமிழைக்காமல் செயற்பட்டேன் என்பதையும் குறிப்பிட்டுக் கொள்கிறேன். எமது மக்களின் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

## வெறும் 24....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது ஏற்பட்டுள்ள இடர் சூழ்நிலை காரணமாக, வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட விவாதத்தை நடத்தாமல் இருப்பதற்கும், காலை 9 மணி முதல் காலை 9.30 மணி வரை மாத்திரம் நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், சனிக்கிழமை நாடாளுமன்றத்தை கூட்டாமல் இருப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, எதிர்வரும் 1 மற்றும் 2 ஆம் திகதிகளில், அதாவது திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய தினங்களில் இரவு 12. மணி வரை வரவுசெலவுத்திட்ட விவாதத்தை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது

இவ்வாறான நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நாடாளுமன்றம் கூடியது. இதனையடுத்து 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் 2025 ஒக்டோபர் 24 ஆம் திகதிய 2459/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் விவாதமின்றி அங்கீகரிக்கப்பட்டன.

அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச , அரச தரப்பு பிரதம கொறடா அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உட்பட அமைச்சர்கள். எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் தற்போதைய இடர் நிலைக்கு உடனடியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்,எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துக்களை முன்வைத்த நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிவரை நாடாளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்பட்டது.

## இடர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல்போனோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன..பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பற்கு பிரதேச செயலகப் பிரிவுகள் ஊடாக ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

தற்போதைய இடர் நிலைமை குறித்து இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் வானிலை ஆராய்ச்சி மையம் விடுக்கும் அறிவுறுத்தல்கள் தொடர்பில் பொதுமக்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும். அலட்சியமாக செயற்பட கூடாது.அரச அதிகாரிகள் விடுக்கும் அறிவுறுத்தலுக்கு அமைய செயற்பட வேண்டும்.

மழையுடனான காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணமளிப்பதற்கும், இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கும் மேலதிகமாக நிதி ஒதுக்க ஆளும்தரப்பு குறைநிரப்பு பிரேரணையை கொண்டுவந்தால் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

தற்போதைய நெருக்கடியான நிலையில் இருந்து மீள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இடர் நிலையில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கு ஆளும்தரப்பு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார்.

## 25 வீதமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ஷர்லி குமார தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபை காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய சூழ்நிலையில், கொத்மலை நீர் மின் உற்பத்தி நிலையம் மற்றும் ரந்தம்பே நீர் மின் நிலையம் ஆகியவற்றை மூட வேண்டியுள்ளது. ரந்தம்பே மின் நிலையத்திற்குள் கசடு கலந்ததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதான மின் இணைப்பு கோபுரம் இடிந்து விழுந்துள்ளது. அதனை சீரமைக்கும் வரை மஹியங்கனை, அம்பாறை மற்றும் வவுனியா பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவது கடினமாக உள்ளது. போவதென்ன மின் நிலையத்திலிருந்து உக்குவெலவரை செல்லும் கேபிள் பாதையில் ஒரு கோபுரம் விழுந்துள்ளது. இதன் காரணமாக, போவதென்ன மின் நிலையத்திலிருந்து வெளியேறும் தண்ணீரை வெளியேற்ற முடியாது.

எனவே போவதென்ன மின் நிலையத்தை பாதுகாப்பாக வைத்திருக்க மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, மேல் கொத்மலை மின் நிலையத்திற்குள் வரும் நீர் சேறும் சகதியுமாக இருப்பதால், நிறைய குப்பைகள் இருப்பதால், மின் நிலையத்தையும் அணைக்க வேண்டியுள்ளது.

அதேபோல், கொத்மலை மின் நிலையத்தில் உள்ள மூன்று ஜெனரேட்டர்களில் ஒன்றில் நீர் கசிவு காரணமாக ஒன்றை அணைக்க வேண்டியிருந்தது.மற்ற இரண்டு தற்போது இயக்கப்படுகின்றன. கூடுதலாக, மற்ற அனைத்து மின் நிலையங்களும் தற்போது அவற்றின் அதிகபட்ச திறனில் இயங்குகின்றன. கூடுதலாக, ரன்டம்பே மின் நிலையத்தையும் அணைக்க வேண்டியிருந்தது.

காலநிலை சீர்கேடு மற்றும் அதனுடனான பாதிப்பு 25 சதவீதம் 50 சதவீதம் வரை மின் விநியோகம் செயழிழந்துள்ளது. அனைவரும் குறிப்பிட்ட பகுதிகளுக்குள் மட்டுமே இருப்பதால் இதை துல்லியமாக கணக்கிட முடியவில்லை. மேலும், கண்டியில் கட்டம்பே கோயிலுக்கு அருகிலுள்ள முதன்மை துணை மின்நிலையம் முற்றிலும் நீரில் மூழ்கியுள்ளது. எனவே, பேராதெனிய பல்கலைக்கழக பகுதிக்கும் கண்டி நகரப் பகுதிக்கும் மின்சாரம் வழங்க முடியவில்லை.

பாதுகாப:பு காரணிகளை கருத்திற் கொண்டு வேறு பல மின் இணைப்புகளையும் துண்டித்துள்ளோம். ஏனெனில் மின் கம்பிகள் தண்ணீரில் கசிந்தால், உயிருக்கு ஆபத்தான சூழ்நிலைகள் மற்றும் உபகரணங்களுக்கு சேதம் ஏற்படலாம். எனவே பொது பாதுகாப்புக்காக மின்சாரத்தை துண்டிக்க வேண்டியுள்ளது.

முன்னுரிமை அடிப்படையில் அத்தியாவசிய இடங்களுக்கு மின்சாரம் வழங்குவது குறித்து தற்போது பரிசீலித்து வருகிறோம். அதன் பிறகுஇ வீடுகளை கவனித்துக் கொள்ள வேண்டும். எனவேஃ சில தாமதங்கள் ஏற்படும் .

ஆனால் முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம் வழங்க வேண்டும். 'எங்களிடம் 7 மில்லியன் வாடிக்கையாளர்கள் உள்ளனர். இப்போது ஏராளமான வாடிக்கையாளர்கள் மின்சாரத்தை இழந்துள்ளனர். இவற்றை சரிசெய்ய நீர் மட்டம் குறையும் வரை காத்திருக்க வேண்டும் என்றார்.

## நாடாளுமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2010 ஆம் ஆண்டு ஏற்பட்ட இயற்கை இடர்த்தினால் நாடாளுமன்றம் வெள்ளத்தில் மூழ்கியது .அதேபோன்றதொரு நிலை தற்போதும் ஏற்பட்டு வருகிறது நாடாளுமன்றத்தை சுற்றியுள்ள தியவன்ன ஓயாவின் நீர்மட்டம் வெகுவேகமாக அதிகரித்து வருவதால் நாடாளுமன்றத்திற்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் நாடாளுமன்ற ஊழியர்களும் அச்சமடைந்துள்ளனர்.

எனவே வேகமாக உயர்ந்து வரும் தியவன்ன ஓயாவின் நீர் மட்டத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் மீண்டுமொரு தடவை நாடாளுமன்றம் வெள்ளத்தில் மூழ்கும் நிலைமை ஏற்படலாம். ஆகவே நீர் மட்டத்தை குறைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# உதவிகளை வழங்க ஐ.நாவும் தயார்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலைக்கு மத்தியில் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் இலங்கை அதிகாரிகளுடன் மிகநெருக்கமான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி செயற்பட்டுவருவதாகவும், அவசியமான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க்-ஆன்ட்ரூ பிரெஞ்ச் உறுதியளித்துள்ளார்.

நாட்டில் நிலவும் மழைக் காலநிலையின் விளைவாகப் பலர் உயிரிழந்திருப்பதுடன், பெருமளவான சொத்துக்கள் சேதமடைந்துள்ளன. நாடளாவிய ரீதியில் தொடர்ந்து மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டோருக்கான அனுதாபத்தையும், தொடரும் மோசமான காலநிலைகுறித்துகரிசனையையும்வெளிப்படுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அவரது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளப்பக்கத்தில் பதிவொன்றைச் செய்துள்ளார்.

'இலங்கையை மிகமோசமான சூறாவளி தாக்கியிருப்பது குறித்து நான் தீவிர கரிசனை அடைந்திருக்கிறேன். அதேபோன்று தமது அன்புக்குரியவர்களை இழந்த சகலருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைக் கூறிக்கொள்கிறேன்' என அவர் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் இலங்கை அதிகாரிகளுடன் மிகநெருக்கமான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி செயற்பட்டுவருவதாகவும், அவசியமான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் ஐ.நா வதிவிடப்பிரதிநிதி உறுதியளித்துள்ளார்.

# 'முழு ஆதரவு தருவோம்' தூதுவர்கள் வாக்குறுதி

சீரற்ற காலநிலையின் விளைவாக இலங்கை பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இலங்கை ஆளும்தரப்புக்கு தமது முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கத் தயாராக இருப்பதாக பிரதமர் ஹரினி அமரசூரியவுடனான சந்திப்பில் வெளிநாடுகளின் தூதுவர்களும், இராஜதந்திரிகளும் உறுதியளித்துள்ளனர்.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால் ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்கள், நிவாரண நடவடிக்கைகள் மற்றும் மீட்பு முயற்சிகள் குறித்து கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கும் நோக்கிலான கூட்டமொன்று நேற்று பிரதமர் ஹரினி தலைமையில் பிரதமர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்கூட்டத்தில் அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்தும் பங்கேற்றிருந்தார். அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் உள்ளடங்கலாக இலங்கையிலுள்ள சர்வதேச நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயராணையர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

மழைவெள்ளம்மற்றும்புயலால்பாதிக்கப்பட்ட சமூகங்களை மீட்டல் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்தல் என்பன தொடர்பில்இதன்போதுவிசேட கவனம்செலுத்தப்பட்டதுடன் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் மீட்பு நடவடிக்கைகள் குறித்தும் சந்திப்பில் விளக்கமளிக்கப்பட்டது.

அதன்படி 'இச்சவாலான நேரத்தில் கொழும்பில் உள்ள பெரும்பாலான இராஜதந்திர தூதரகங்கள் இலங்கை ஆளும்தரப்புக்குத் தமது ஒத்துழைப்பையும் ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ளன. மனிதாபிமான உதவி வழங்கலை எளிதாக்குவதிலும், தற்போதைய நிவாரணம் மற்றும் மீட்பு முயற்சிகளுக்குப் பங்களிப்பதிலும் இலங்கை அதிகாரிகளுடன் நெருங்கிப் பணியாற்றுவதற்குத் தயாராக இருப்பதாகத் தூதரகங்கள் தெரிவித்துள்ளன' என அயலுறவுத்துறை அமைச்சு அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மேலும்வெளிநாடுகளில்உள்ளஇலங்கைத்தூதரகங்கள்மற்றும் கொழும்பைத்தளமாகக்கொண்ட இராஜதந்திரத்தூதரகங்கள் ஆகியவற்றுடனான ஒருங்கிணைப்புக்கென அவசரகால நடவடிக்கைப் பிரிவொன்று நிறுவப்பட்டிருப்பதாகவும் அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.11.2025இல் வெளியிடப்பெற்றது